**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

Calendar)
Preliminary Register) CC.461/2021
Sessions)

( Prosecution P.W.9
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | பாபு | -- | |
| Father's Name | செந்திவேல் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | சங்கரன்கோவில் | Age | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 8th Day of June 2026..

எதிரி ஆஜரில்லை . குவிமுச பிரிவு 317 வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சங்கரன்கோவில் நகர் காவல் நிலையத்தில் சார்வு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் இதற்கு முன்பு ஸ்ரீவில்லிபுத்தூர் டவுண் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நான் பணிபுரிந்து வந்தபோது கடந்த 21.01.2021ம் தேதி காலை 08.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது பெருமாள் மகன் முருகன் என்பவர் நிலையத்தில் ஆஜராகிக் கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.29/2021 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12.** அதன் பின்பு ஆய்வாளர் சொன்னதன் பேரில் வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் காலை 09.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரியப்பன், வசந்த குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.13.** அன்றைய தினம் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்திற்கு இருந்த விபத்து ஏற்படுத்திய வாகனம் இடது முன்பக்க வீலின் ப வடிவில் உள்ள கருப்பு கலர் ஆர்ச் அத்தாட்சியின் பேரில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். **அத்தாட்சி அ.சா.ஆ.14.** பின் சாட்சிகள் முருகன், வினோத் , சதீஷ்குமார், முனியராஜ், மாரிமுத்து, வசந்தகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 21.01.2021 ம் தேதி ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்குச் சென்று 11.55 மணி முதல் 12.55 மணி வரை பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்து போன வீரபொம்மு என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை

தயாரித்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனைக்குப் பின்னர் பிரேதத்தை நல்லடக்கத்திற்காக உறவினர் வசம் ஒப்படைத்தேன். சாட்சி பிரேதப் பரிசோதனைக்கு உதவியாக இருந்த கருப்பசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்காக ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரில் சம்பவ இடத்தில் பார்க்கும் போது இறந்த நிலையில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் பெறுவதற்கு முன்பே பிரேதத்தை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். புலன் விசாரணைக்கு ஆய்வாளர் எழுத்துபூர்வமாக அதிகாரம் கொடுக்கவில்லை. 31.08.2021 அன்று பார்வை மகஜர், மாதிரி வரைபடம், அத்தாட்சி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். உடனடியாக பார்வை மகஜர் அத்தாட்சி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த அ.சா.1, 3, 4, 6 ஆகிய சாட்சிகள் இனம் தெரியாத வாகனம் மோதியதாக எனது விசாரணையில் சொல்லியுள்ளனர் என்றால் சரிதான். நான் விசாரித்த மேற்படி சாட்சிகள் சம்பவ இடத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் உதிரி பாகங்கள் கிடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் முறையாக புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

சாட்சியின் கையொப்பம்

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

R V RAJA KUMAR Digitally signed by R V RAJA KUMAR

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**